ஸ்ரீ:

கான வித்யா ப்ரகாசினி.

(ஓர் இனிய மாதப்பத்திரிகை.)

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக்கண்டார் — பாரதி.

மலர் 1. | நவம்பர்–1931. | இதழ் 2.

நாத சுகம்.

அமுதினைச்செவியிலூற்றி யகத்தினிற்பாய்ச்சுமின்பம்:
குமுதமிட்டலைகள்வீசும்! கொஞ்சிடுங்குயிலுங்கிள்ளை
தமிழெனப்பேசும்வேனிற் சந்தனச்சோலைமேவும்,
அமரக்கன்னியரோடாடும் அழகணிவாழ்விற்கூட்டும்.,

இளமையின்காதல்பேசும் இன்னியகுரலோ! சேயின்
இளந்தமிழ்மழலையோ! வெண்ணிலவினிலிருவர்,காதல்
வளந்தழைத்தோர்க்குத்தென்றல் வளர்த்திடுஞ்சுகமோ! கண்ணன்
ஒளிபெறுஞானந்தன்னை யுருக்கியேவார்த்தபாட்டோ!

வெம்மையைத்தண்மையாக்கும் வெறுமையைவளமையாக்கும்,
வன்மையைமென்மையாக்கும் மமதையைச்சமதையாக்கும்,
இம்மையை அம்மையாக்கும் முதுமையைபிளமையாக்கும்
தன்மயமனைத்துமாக்குந் தத்துவந்தழைத்தநாதம்.

—சுத்தானந்த பாரதி.

கான வித்யா ப்ரகாசினி.

கவிதையஞ் சோலை.

வேய்ங்குழல் இசைத்த கோபாலன்.

குறித்தமுகில் பந்தரிட்டுக் குறுந்துளி தூற்றிட ஆயர்
தறித்தமரம் அத்தனையும் தழைத்தலர்ந்துபழுத்துதவக்
கடும்புலிகள் அயர்ந்து சித்திர காயம்எனும்பெயர்விளக்கக்
கொடும்பணிகள் மாலையதாய்க் குலரத்னவிளக்கேற்றக்
கருங்கற்றூன்வெண்ணெயெனக் கரைந்தோடவிரைந்தோடி
வருங்கற்றூன் இமைப்பொழிய மழவிடை அங்கயர்ந்துநிற்ப
மிகவிளங்கோவியர் எழுத வெள்கியதிரிபங்கியுடன்
சுகஇளங்கோவியர் மழலை தொனித்தகுழல்இசைத்தோய்கேள்.

[அழகர் கலம்பகம்.]

அரும்பத விளக்கம் :— குறித்த = முழங்குகின்ற, முகில் = மேகங்கள், அலர்ந்து = பூப்பூத்து, சித்திரகாயம் = (கோடுகளால்) பலவகை நிறமுள்ள உடம்புடைய புலி, பணிகள் = பாம்புகள், மாலை = வரிசை, குலரத்னம் = மேம்பட்டமாணிக்கம், இங்கேநாகரத்தினம், கருங்கற்றூன் = கருங்கல்தான், வருங்கற்றூன் = வருங்கன்று + ஆன் = வரும் கன்றையுடைய பசுக்கள், மழவிடை = இளஎருதுகள், மிகவிளங்கோவியர் = மிகவிளங்கு + ஓவியர் = மிகுதியாகப் பேர்பெற்று

விளங்கும் சித்திரகாரர்கள், வெள்கிய = வெட்கம் அடைந்துபோகும் படியான. திரிபங்கி = மூன்றுவளைவுள்ள திருக்கோலம், கோவியர் = கோபஸ்திரீகள், சுகஇளங்கோவியர் = கிளிபோன்ற மொழியினரான இளையகோபஸ்திரீகள்.

குறிப்பு:—ஜகன்மோகன பாலகோபாலன் வேய்ங்குழல் இசைத்து நிற்கின்றான். அதைக்கேட்ட மாத்திரத்தில், அவனது திருமேனியையொத்தமேகங்கள் வந்து கவிந்து ஆகாயப்பந்தர் இடுகின்றன. அவை இசைக்குப்பொருந்துமாறு இனிமையாக முழங்குகின்றன; ஆனந்தக்கண்ணீர் வடிப்பதுபோல், அமுதம்போன்ற சிறிய நீர்த் துளிகளைச் சிந்துகின்றன. பட்டுப்போனமரங்களும் தழைத்துப் பூத்துப் பழுத்து உதவுகின்றன. கடும்புலி முதலிய கொடுவிலங்குகளும் கொடுமைநீங்கி நெஞ்சுருகி எழுதுசித்திரங்கள்போல் உடம்பு அசையாமல் நின்று கேட்கின்றன. கொடியசர்ப்பங்களான ராஜநாகங்களும் படமெடுத்துச்சீறுதல் ஒழிந்து, வரிசை வரிசையாக அமர்ந்து தங்கள் முடியிலுள்ள நாகரத்தினங்களால் மாணிக்க தீபம் ஏற்றுகின்றன. கருங்கல்லும் உருக்கிய வெண்ணெய்போல் கரைந்து உருகி ஓடுகின்றது. விரைந்தோடி வரும் பசுக்களும் எருதுகளும் இமைகொட்டாமல் செவியாட்டாமல் நின்று கேட்கின்றன.

இவ்வாறு குழல் ஊதிநிற்கும் கண்ணனது 'திரிபங்கி' என்ற திருக்கோலத்தைப் பேர்பெற்ற சித்திர நிபுணர்களும் எழுதமுடியாமையால் வெள்கி நிற்கின்றார். அக்குழல் இசை, கிளிபோல் கொஞ்சிப்பேசும் இளங்கோவியரின் மழலைச்சொல்போல் தொனிக்கின்றது என்று கவிசாதுரியமாகக் கூறுகிறார்.

சிரிப்பின் சிறப்பு.

ஆழ்ந்த உள்மூச்சோடு தொடங்குவது சிரிப்பு; பிறகு நெஞ்சும் மூச்சுப்பைகளும் விரைவில் அடுத்தடுத்துக் குறுகுகின்றன. இத்தகைய சிரிப்பால் இரத்தம் மூச்சுப்பைகளுக்கு விரைவாகச் செல்லுகிறது. இது உடம்பிற்கு நல்லது. உடம்பு முழுமையும் குலுங்கச் செய்வது சிரிப்பு. மூச்சுப்பைகளோடு இரத்தப்பையும் சிரிப்பால் நன்மை பெறுகின்றது. ஜீரணக்கருவிகளும் நன்மை அடைகின்றன.

இரத்த ஓட்டம் சரியாவதால், கண்கள் ஒளிபெற்று மலர்ச்சி பெறுகின்றன. முகமும் மலர்ச்சி பெறுகின்றது. மூளை சுறுசுறுப்பு அடைகின்றது.

இவ்வாறு உடம்பிற்கு நன்மை தருவதோடு, சிரிப்பு உள்ளத்திற்கும் நன்மை தருகின்றது. சிரிப்பு உள்ளத்திற்கு அமுதமாகும். சிரிப்பால்—உற்சாகத்தால், மனோசக்தி பொங்குகிறது. ஒளிதருவதில்—அழகுதருவதில்—ஜீவகளை தருவதில், சிரிப்பு ஓர் உயர்ந்த—அரிய—ஒப்பற்ற சாதனமாக மதிக்கத்தக்கது.

குழந்தையைப் பார்.

குழந்தையின் சிரிப்பு தெய்வீகமானது பேசத்தெரிந்து கொள்வதற்கு முன், குழந்தை சிரிக்கத் தெரிந்து கொள்ளுகிறது. குழந்தைச் சிரிப்பை நாம் மறந்துவிடுவது நன்றன்று.

குழந்தை பிறந்த மூன்றாவது வாரத்தின் இறுதியிலேயே, அதன் முகத்தில் இளநகை அரும்புகிறது. மூன்றாவது மாதக்கடைசியில், குழந்தை சிரிக்கக்கற்றுக்கொள்கிறது.

குழந்தையைப்போல இரு — என்று ஞானி சொல்லுகிறான். குழந்தையைப் போலச்சிரி என்று மனோவசிய சாஸ்திரி சொல்லுகிறான்.

கதர் விற்பனை.

(தேசிகவினாயகம் பிள்ளை.)

பாவியென் கதையினைக் கேளுமையா—அந்தப்
பாஞ்சாலி கதையுமீ தொக்குமோ ஐயா
ஆவியைப் பிடித்துநான் அலைவதெல்லாம்—என்றன்
அருமைக் குழந்தைகளுக்காகவே ஐயா- 1

கூடப்பிறந்தவரும் மாண்டுபோனார்—என்னைக்
கொண்ட கணவரும்போய்க் காடுமறைந்தார்
தேடி அவரளித்த பொருளுமில்லை—ஒரு
செம்பாலடித்தகாசென் கையிலுமில்லை-

வாடிமுகஞ்சடைத்த மக்களுமுண்டு—தீரா
வயிற்றுப்பசியுமுண்டு நானுமுண்டு
வீடும் குடியிருக்க இல்லை ஐயா—என்றன்
விதியின் கொடுமைகளும் கொஞ்சமோ ஐயா-

பருத்திவிளைக்குச்சென்று பஞ்சுவாங்கினேன்—அந்தப்
பஞ்சை அரைத்து நல்ல நூலும் நூற்றேன்
ஒருத்தி துணையுமின்றி ஆடையும் நெய்தேன்—அதை
ஊரூராய்க் கொண்டு கொண்டு விற்கவும் வந்தேன்- 4

நல்லசரக்குச்சீமைச் சரக்கென்று நீர்—இந்த
நாட்டுச்சரக்கைப் பழிப்பாக்கலாமோ ?
மெல்லிய பூவாடை நெய்துதருவோம்—உங்கள்
மேலான ஆதரவே வேண்டுமையா- 5

அஞ்சுவயது மகள் கோலமிட்டால்—அதை
அழகில்லை என்றழிக்கும் தாயருமுண்டோ ?
பஞ்சுபடுவதிலும் பெரும்பாடு—நாங்கள்
படுவதை நீங்களென்றும் பார்த்ததில்லையோ ? 6

எங்களையும் 'மில்' லெனவே எண்ணலாமோ—அந்த
இரும்புக்கசதியுண்டோ களைப்புமுண்டோ ?
பொங்கும் மனக்கவலை எதுமுண்டோ—வீட்டுப்
பொறுப்புகள் சற்றுமுண்டோ கூறுமையா- 7

நெல்லை யள்ளிக்குத்துவேனோ நெய்திடுவேனோ—நான்
நெருப்பினை மூட்டுவேனோ கொட்டை நூற்பேனோ ?

மில்லினுக்கு வாயுண்டோ வயிறுமுண்டோ—அதை
விட்டு விலகாத மக்கள் கூடவேயுண்டோ ? 8

பஞ்சினையான் பன்னுவேனோ பணிசெய்வேனோ—இந்தப்
பசலையழாதபடி பால் கொடுப்பேனோ ?
நெஞ்சிரக்கமுள்ளவரே ! கொஞ்சம் பொறுத்தால்—இன்னும்
நேரிய நல்லாடைநெய்து தருவோமையா- 9

காசுமியர் சால்வை செய்த கையுமில்லையோ—உயர்
காசியிலே நெய்தபட்டின் காலமும்போச்சோ
மாசிலாத டாக்காவின் மஸிலினுடை—இன்னும்
வாவென்றால் வாராதோ வளர்ந்திடாதோ ? 10

சாயமிட்ட சேலைகளை நெய்து தரோமோ—நல்ல
ஜரிகையில் வேலைசெய்து கொண்டுவரோமோ
நேயமொழ ஆதரித்தால் போதுமையா—இந்த
நீணிலத்தில் வெற்றியொடு நிற்போமையா 11

அந்நிய நாடுகளுக் காடையனுப்பி—மானம்
அழியாமல் காத்ததுங்கள் முன்னோரல்லவோ
இந்நிலை மறந்து நீங்களிந்தநாளில்—உங்கள்
இடுப்புத்துணிக்கலைப்ப தேழமையன்றோ ? 12

கைகால் களைக்க நெய்த கதராடை—இரு
கண்கள் சடைய நெய்த கதராடை
ஐயாநீர் வாங்கியிதை அணிவீரோ—எங்கள்
அரும்பசிக் கன்னமெது மளிப்பீரோ ? 13

குறுக்கு முறிய நெய்த கதராடை—கும்பிக்
கொதிப்பை யடக்கி நெய்த கதராடை
மறுத்துநீர் தள்ளாமல் கொள்வீரோ—எங்கள்
வயிற்றி லெரிதணியச் செய்குவீரோ ? 14

தேசமெலாம் புகழ்ந்திடு மாடை ஐயா—மேலைச்
சீமையையும் நடுக்கிடு மாடை ஐயா
காசுபண மில்லாத ஏழைகளுக்காய்—அந்தக்
காந்தி மகான்போற்றும் காமதேனுவையா- 15

வேறுவேறு புண்ணியங்கள் செய்யவேண்டுமோ—கதர்
வேஷ்டி வாங்கி யணிவது போதாதோ ஐயா
நூறுபேருக்கன்னம் நிதமளித்தபலன்—இந்த
நூலாடை கட்டுபவர்க்குண்டே ஐயா- 16

அழிவறுமான்மா.

ஸ்ரீ சுத்தானந்த பாரதி.

சுதந்திந்திய வாழ்வே, அமரநிலையே, கடவுட்டன்மையே, அழிவறும் ஆன்மநிலையே மனிதன் அடையத்தக்கது. அதற்கு அருகன் யார்? கோழையல்ல! துர்ப்பலனல்ல! ஆன்மவீரனே; எதற்கும் அஞ்சிக்கலங்காச் சமசிந்தையனே; "அழியும் உடலில் அழியாதுள்ள தேகியே யான்" என்று தெளிந்தவனே தக்கவன். கீழியல்பின் கூட்டங்களை வென்று, 'நான், எனது, எனது உறவு' என்னும் பாசங்களைக்களைந்து, இந்
தேகத்தை நடத்தும் பரமாத்மாவின் ஆணையைத்துணிந்து செய்வோ
தீரன். தேகியின் உண்மை யறியாது, தனது முன்னே நிற்கும் உ
தோற்றங்கள் அழியுமே என்று விஜயன் கலங்குகிறான். அவனுடை
மயக்கையொழிந்து, அனைத்திலும் அழியாப்பொருளான ஆன்ம
யத்தை வலியுறுத்துகிறார் பகவான்.

"அர்ஜுனா! வருந்தத்தகாதார் பொருட்டு வருந்து
பண்டிதர்போல பாவபுண்யம் பேசுகிறாய்! இறந்தோர்க்காயினு
இருப்போர்க்காயினும் அறிந்தோர் வருந்தார்! இந்த அழியுட
காட்சிகள், அழியாதிருக்கும் ஆன்மாவே நாம். இதையறி
நான் எக்காலத்தும் உள்ளேன்; பூதசரீரம், இந்திரியங்கள், அ
தக்கரணங்களைக் கடந்து உண்மையில் ஆன்மாவேயான இவைகளு
எக்காலும் உள்ளவர்களே; நாம் காலதேச வர்த்தமானங்களை
கடந்த ஆன்மாவாதலின் என்றும் உள்ளோம். நாமும் இவ்வரச
ரும் நலியோம், நலியோம். நாம் இருந்தோம், உள்ளோம், என்று
மிருப்போம்! குழந்தை, இளமை முதுமைப்பருவமும், யாக்கையோ
டிணைந்த ஆன்மாவிற்குத்தோன்றும்; ஆனால் இளமையும் முதுமை
யும் இவ்வுடலுக்கே. அதுபோலவே, இவ்வுடல் வீழ்ந்தால்
இன்னொன்று வரும்; இந்தத் தேகாந்திரத்தால் தேகி மாறிடான்.
இதனால் உண்மைத்தீரர் உள்ளங்கலங்கார். சூடுங் குளிருஞ், சுக
முந் துக்கமும், புலனெழுந்து புக்கெனமறையும். பஞ்சதன்
மாத்திரைகளில் இந்திரியங்கள் பிறக்கின்றன; அவற்றின் விஷய
ஸம்மந்தத்தாலேயே இருவிகாரங்களான சுகதுக்காதிகள் பிற
கின்றன; அவை தோன்றி மறைவன; ஏபார்த! இவை அநி
யம்! இவற்றைப் பொறு! மனிதரிற்சிறந்தோய்! இவற்று
வருந்தாது, இன்பதுன்பம் இரண்டுஞ் சமமெனும், ஆண்மைத

தீரனே அமுதவாழ்வடைவான்; அத்தகைய அபேதஞானியை
இச்சுகதுக்கத் தொந்தங்கள் தாக்கா; ஆதலின் ஆண்டவன் கட்டளை
யான இந்த அறப்போரிலெய்தும் சுகதுக்கங்களைப் பொறுத்து நீ
ஞகப்பணிசெய். ஆன்மா, ஸத்து, உண்மை; மற்றத் தோற்றங்
கள் அஸத்து; இன்மை; மாறிமாறி யழிவன்; இன்மைக்கு இருப்பு
இல்லை; உண்மைக்கு இன்மையில்லை; இத்தைத் தெரிவார் தத்
துவ ஞானியர்; ஸத்து, அஸத்து, உள்ளது, இல்லது, ஆன்மா உள்
ளது, மற்றதெல்லாம் மாறுவது என்னும் உண்மையுறுதியை திரு
க்கு திரிசிய விவேகமுள்ள ஞானிகளறிந்து, உண்மையான ஆன்
மாவிலொன்றி, காலம், இடம், காரணங்களால் ஆகியழியும் எதற்கும்
வருந்தார்; பாரெலாம் பரவிய பரம்பொருட்கழிவிலை! இந்த அழி
பாப்பொருளை அழிக்க யார் வல்லார்? ஆன்மா எல்லையற்று, அழி
ற்று என்று முள்ளது; அதுவே இந்த யாக்கை வடிவுகள்! யாக்
விழும் ஆன்மாவாழும்! ஆதலிற் போர்புறி! இந்த ஆன்மா
ல்வதில்லை; கொலையுண்பதுமில்லை! அப்படி நினைப்போர் அறி
வரே. இந்த ஆன்மா என்றும் பிறப்பதுமில்லை; இறப்பது
லை; முன் இல்லாது புதிதாய் முளைத்தவனல்ல; இருந்தது பின்
இல்லனு மல்லன்; இவன் பிறப்பிலான்; நித்தியன், நிரந்தரன்
தனன்; யாக்கை சிதையினும் அவனுக்கு அழிவில்லை; அவன்
வற்றவன், பிறப்பற்றவன்; என்று முள்ளவன் நித்தியன். இதை
றிந்தவன் எவனையும், கொல்வதும் கொல்லுவிப்பதும் எங்ஙனம்?
னிதன் பழந்துணி களைந்து புதுத்துணி யுடுப்பதுபோல், இத்தேகி
ம் பண்டுடல் களைந்துப் புத்துடலடையும். ஏ அர்ஜுன இப்பொன்
ம் உடலே போரிற் சாவது; இவ்வுடல் எதனுல் உயிர் பெற்றிருப்
தோ, எது இவ்வுடலில் மாறுதிருப்பதோ, இவ்வுடல் இருப்பி
னும் இறக்கினும், எந்தப்பரம்பொருள் சிதையாதிருப்பதோ அதுவே
ஆன்மா! அதுவே நீயும் அனைத்துமாகும்! அதுவே உன்முன்
அமர்புரிவீரராய் யாக்கைச் சட்டையணிந்து நிற்பது. பெயர் வடி
வற்ற உயர்பெரும் ஆன்மா, தேகியே எங்கும் ஒன்றெனத் தெரி
வாய். அத்தகை யான்மா அழிவதேயில்லை; இறப்பது அழிபொருள்;
இருப்பது மெய்ப்பொருள்; மாறியழிவது மாயச்சட்டையே;
ஆன்மா மாறுன் அழியான் மாயான்! கொல்வோன் கொல்லப்
படுவோனென்பதும் சிதைக்கொணுப் பொருளைத் தெரியாதுரைப்
பதே! கிழிந்ததைக்களைந்து புதியதை யணிவர்; அதுபோல நலிந்
ததை விடுத்து நவவுட லணிவதைச் சாவென்றுரைப்பர்! தத்துவம்
இதுவே.

இந்த ஆத்மாவை, ஆயுதம் சிதைக்காது; அனல் எரிக்காது;
நீர் நனைக்காது; காற்று உலர்த்தாது; அவன் சிதைக்கெணுதவன்;

எரிக்கொணுதவன்; நினைக்கொணுதவன்; உலர்த்தொணுதவன்; என்றுமுள்ளவன்; எங்குமுள்ளவன்; துளக்கற நிலைத்த தொல் பொருள் அவனே. அவன் அறிதற்கரியான்; நினைவிற்கரியான்! மாறுபாடற்றவன் என்பதை யறிந்து வருந்தாதிருப்பாய்; வலிய தோளினுேய்! இவ்வான்மா சதா பிறந்து இறப்பவன் என்று நீ நினைத்தாலும், அப்போதும், இதைப்பற்றி வருந்துதல் பொருந்தாது; ஏனெனில் பிறந்தவன் இறத்தலும் இறந்தவன் பிறத்தலும் உறுதியானது; தடுக்கொணுதது; இதன் பொருட்டு வருந்துதல் வீணே; பரிகரிக்க முடியாதது; வருந்தத்தகாதது. ஏ பாரதனே, உயிர்களின் ஆதியந்தம் அறியப்படாதது; அவை, இடையிலேயே உடல்பெற்றிருப்பது; இவ்விஷயத்தில் ஏனோ துயரம்? இவ்வான் மாவை, யோகசித்தியால் அற்புதமென்னப்பார்க்கிறு னெருவன்; அற்புதமென்ன வுரைக்கிறனெருவன்; அற்புதமென்னக்கேட்கிறு னெருவன்; இதைக்கேட்டும் அறிவான் யாவனுமில்லை. ஏ பாரத அனைவருடலுளும் என்றும் உள்ளவன் ஆன்மா; அவன் வதை கொணுதவன்; ஆதலின் இவ்வுயிர்களின் பொருட்டுநீ துயருறவே டாம். அதாவது இவ்வான்மா புலன்மனங்கடந்த அரும்பெரும்ப பொருள்; இதன் ஆதியும் அருவாம்; இறுதியும் அருவாம்! இடை காலத்திலேயே இது உடல்பெறுக்கின்றது; இதற்குத் துயர்ப் வதேன்? பிறப்பதும் உடலே இறப்பதும் உடலே! சாவது செ தாற் சஞ்சலமுனக்கேன்? அழிவதழிந்தால் அழுகை இதற்கேன் இறந்தேதீரும் இவ்வுடல்களுக்கோ இத்தனை வருந்துனே, இணை யறு வலியோய்! நீ மஹாபாஹு! எத்தனையோபோர்களை வென் றனை; இப்போர்முன்னை இடர்ப்படலேனோ!" என்றிவ்வா ஆன்ம வுறுதியையும்; யாக்கை யழிவையும் வலியுறுத்தி, இடை யில் வரும் இவ்வுடல் வாழ்வில், ஒவ்வொருவனுக்கும் இயல்பிற் கேற்ற பணியொன்றுள்ளது; அதுவே சுதர்மம். அதைச் செய்தே தீருக எனத்துணிவுறுத்துகிறுர்.

"அர்ஜுன! மேலும் உனது ஸ்வதர்மம்; தன்னறங்கண் டுந் தளர்வது மாமோ? உன்னைப்போன்ற வீரமன்னர்க்கு, அறப் போர் தன்னினுஞ் சிறந்ததொன்றில்லை; தானே வந்ததித்தரும யுத் தம்; இன்ப விட்டுக் கதவு திறந்தது! இத்தகை யுத்தம் எய்திடப் பெற்ற அரசர் இன்பமடைகுவர். அர்ஜுன! இவ்வறப்போரினை இயற்றுயாகில், உன் இசையும் தருமமும் இழந்து பாபமுஞ் சுமப் பாய்! நீண்டகாலம் வையத்தோருன் வசையைக் கூறுவர்! பேரி சை வீரன் பின்னே எய்தும் வசையே சாவினும் கொடியது வாகும்! உன்னை மதிக்கும் மஹாரதர்களே, அச்சத்தாலே யகன் றனையென்பர்; துச்சமாயுன்னைத் தூற்றுவர் பகைவர். சொல்லத்

தகாதனசொல்லி, உன் திறமையை யிகழ்வர்; இதனினும் மிகுந்த துயரமுமுளதோ ? குந்திமகனே ! வீழ்ந்தால் வீரவிண்ணினைப்பெறுவாய் ! . வென்றுவிந்த மேதினியாள்வாய். ஆதலின் போர்செயத் துணிந்து நீ யெழுந்து நில் ! இன்பதுன்பம், லாப நஷ்டம், வெற்றி தோல்வியைச் சமமாயெண்ணி யுத்தத்திற்குச் சித்தமாய் நில்லு ! இப்படிச் சமபுத்தியுடன் செய்தால் பாவமெய்தாய் ! இவ்விதம் சாங்கிய யோக வழிப்படி உனக்கு புத்திசொன்னேன். இனி நிஷ்காம கர்மயோகவிஷயத்தைக்கேள் ! இதை புத்தியிற்கொண்டு அனுசரித்தால் வினைப்பற்றினின்று விடுபடுவாய்.”

இவ்வுலகமும், ஆன்மமுன்னேற்றமும், சலவைக்கல்லால் இழைத்த பாதையல்ல; அகப்போர், புறப்போரெனும் வாள்முனையிலேயே வாழ்வு நடக்கவேண்டியிருக்கிறது. தீமை, அநீதி, பொய், ருட்பகைகளை ஆன்மவீரன் பின்வாங்காது தீரமாகப் பொருதியே ன் செல்லவேண்டும்; அப்போரைவிட்டு ஓடுவது வசையாகும்; தைச்சாடி வீரமுடன் வீழ்வதும் இசையாகும்; அதைத்துணிந்த த்துடன் வெல்வது பேரின்பமாகும். திருமகளின் புன்னகை, ளியின் பயங்கரக்கோலம் இரண்டையும் மனஞ்சுளிக்காது சம கவே வரவேற்கவேண்டும். காலநிலைக்கேற்றபடி உள்ளத் ருந்து அவரவர் இயலறத்திற்கேற்றபடி ஆண்டவன் ஆணையிடு றான். அது எதுவாயினும் அப்படியே ஏற்று ஆற்றுவதே வீர ருக்கழகு. அர்ஜுனனுக்குப் போராணை யிருந்தது ! நமக்கு வேறு ஆணை யிருக்கலாம்; எதுவாயினும் அதற்கேற்ற கடமையைச் செய்ய ஆத்மசக்தி விஜயர்கள் உலக சமாதானத்திற்கு எழுந்துநிற்க வேண்டும். வாழ்வின்போரில் தளரக்கூடாது ! ஆவதும் அழிவதும் ஆண்டவனிச்சை; நாம் அவன் கருவி; அவன் ஆணையே நமதுகடமை என்பதே இனி வலியுறுத்தப்படுகிறது. இதுகாறும் ஆத்மாவொன்றே உண்மை, மற்றெல்லாம் மாறிமாறி மடியும் பிரகிதி, வடிவங்கள், என்று ஆத்மஞான விசாரத்தை எடுத்துப்புகட்டினார்.

இதன் அடுத்த இதழில் “ஜேஸினுதெல்ல” என்ற தோடிராகக் கீர்த்தனையும் மற்றும் ஸங்கீத விஷயமான வியாஸங்களும் அதிகமாக வெளிவரும்.

ப—ர்.